**IN THE COURT OF THE SUB JUDGE, MELUR**
**DEPOSITION OF WITNESS**
**OS 252/2022**

**Name** : **Gowsalyarani**
**Father's Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 13.03.2023**

**வா.சா.1 முதல் விசாரணை:-**

எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இவ்வழக்கின் 1ம் வாதி. தாவா சொத்தை காட்டக்கூடிய தோராய வரைபடம் வா.சா.ஆ.1. 07.08.2012ம் தேதி லேட்.முனிசிங் தனது ஆண் வாரிசுகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 2010 முதல் 2022 வரையிலான காலங்களுக்கு ரைஸ்மில்லிற்கு பகவான்சிங் பெயரில் மேலூர் நகராட்சிக்கு செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் 3எண்ணிக்கை வா.சா.ஆ.3. 07.2.2021ம் தேதி பகவான்சிங் இறந்ததற்கான இறப்பு சான்று கணிணி நகல் வா.சா.ஆ.4. 15.5.2021ம் தேதிய பகவான்சிங்கின் வாரிசு சான்றிதழ் கணிணி நகல் வா.சா.ஆ.5. சர்வே எண்.21/B, 21/C, 22/2 பகவான்சிங் பெயரில் உள்ளதற்கான மேலூர் டவுண் சர்வே பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.6. 2008-2018 வரையிலான காலங்களுக்கு மின் பயனீட்டுக்கட்டணம் முனிசிங் பெயரில் செலுத்தப்பட்டதற்காக மின்கட்டண அட்டைகள் 2 எண்ணிக்கை வா.சா.ஆ.7. 2007-2022 வரையிலான மேற்படி ரைஸ்மில்லிற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் 27 எண்ணிக்கை வா.சா.ஆ.8. மேலூர் நகராட்சிக்கு 2010-2022 வரை பகவான்சிங் பெயரில் செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகள் 8 எண்ணிக்கை வா.சா.ஆ.9. 2006-2022 வரையிலான மேலூர் நகராடசிக்கு

செலுத்தப்பட்ட ரைஸ்மில்லிற்கான தொழில் வரி ரசீது 6 எண்ணிக்கை வா.சா.ஆ.10. 22.5.2022ம் தேதி மேலூர் காவல்நிலையத்தில் 1ம் வாதி கொடுத்த புகார் மனு வா.சா.ஆ.11. வழக்கிடை சொத்தை பிரதிவாதிகள் சேதப்படுத்தியதை காண்பிக்க கூடிய 5-புகைப்படங்கள் மற்றும் சி.டியுடன் கூடிய ரசீது வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13. 23.7.2022ம் தேதி மாவட்ட கண்காணிப்பாளர், மதுரைக்கு 1ம் வாதி கொடுத்த புகார் மனு வா.சா.ஆ.14. 23.7.2022ம் தேதி மீண்டும் மேலூர் காவல்நிலையத்தில் 1ம் வாதி கொடுத்த புகார் மனு வா.சா.ஆ.15. 29.7.2022ம் தேதி மாவட்ட கண்காணிப்பாளர் பெற்றுக்கொள்ளப்பட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.16. 04.11.2018ம் தேதிய தாவா சொத்துக்களை காட்டக்கூடிய புகைப்படங்கள் 4எண்ணிக்கை சிடி மற்றும் ரசீதுகள் வா.சா.ஆ.17 மற்றும் 18. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.